வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 11.4.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று வாரணாசியில் மொத்தம் 3 ஆயிரத்து 884 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு திட்டங்களைத் தொடக்கி வைத்து வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து மத்திய பிரதேஷ் மாநிலம் அசோக் நகர் மாவட்டத்தில் ஈசாகாட் பகுதியில் உள்ள ஆனந்தபூர் தாம் மடத்திற்கு பிரதமர் நேரில் சென்று வழிபட்டார்.

2026-ஆம் ஆண்டு தமிழக சட்டமன்ற தேர்தலுக்கு, அஇஅதிமுக பொதுச் செயலர் திரு எடப்பாடி பழனிச்சாமி தலைமையில், பிஜேபி, கூட்டணி அமைத்து இருப்பதாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா அறிவித்துள்ளார்.

புதுச்சேரி, காரைக்கால், ஏனாம் பகுதிகளில் 61 நாள் மீன்பிடி தடைக் காலம், வரும் 15-ஆம் தேதி முதல் அமலாக உள்ளது.

*மோடி-வாரணாசி*

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று வாரணாசியில் மொத்தம் 3 ஆயிரத்து 884 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு திட்டங்களைத் தொடக்கி

வைத்து வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். பிராந்தியத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கான, கல்வி, சுற்றுலா, மின்சாரம், உள்கட்டமைப்பு திட்டங்கள் இதில் அடங்கும். தொடர்ந்து பிரதமர் திரு நரேந்திர மோடி பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் பழமையின் சின்னமாக திகழ்ந்த காசி தற்போது முன்னேற்றத்தின் முன்மாதிரி பிராந்தியமாகவும் மேம்பட்டு வருவதாக கூறினார். பிரதமரின் வாரணாசி பயணம் குறித்து கூடுதல் விவரங்கள்.........

(வாய்ஸ்)

*மோடி-வாரணாசி*

(வாய்ஸ்)

வாரணாசியில், மக்களுக்கான அடிப்படைத் தேவைகள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கான வசதிகளில் புரட்சிகரமான மாற்றங்களை அரசு கொண்டு வந்து, நவீன நகர்ப்புற மையமாக மேம்படுத்தி இருப்பதாக பிரதமர் தமது உரையில் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியின் போது 70 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கு ஆயுஷ்மான் அட்டை, மற்றும், பனஸ் பால் பண்ணை விவசாயிகளுக்கு போனஸ் வழங்கும் பணிகளை, அவர் தொடக்கி வைத்தார். காசி பகுதியின் புகழ்பெற்ற 3 உற்பத்தி பொருட்களுக்கு, புவிசார் குறியீட்டு சான்றிதழ்களும், நிகழ்ச்சியின் போது வழங்கப்பட்டன. உத்தரபிரதேஷ் ஆளுநர் திருமதி ஆனந்தி பென்

பட்டேல், முதலமைச்சர் யோகி ஆதித்ய நாத் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

மோடி-மத்திய பிரதேஷ்

தொடர்ந்து பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மதியம் மத்திய பிரதேஷ் மாநிலம் அசோக் நகர் மாவட்டத்தில் ஈசாகாட் பகுதியில் உள்ள ஆனந்தபூர் தாம் மடத்திற்கு நேரில் சென்று அங்குள்ள, குருஜி மகராஜ் மந்திரில் வழிபட்டார். 315 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள, நவீன கோசாலை மற்றும் இதர வசதிகளையும், அங்கு நடைபெறும் வேளாண் செயல்பாடுகளையும் அவர் நேரில் பார்வையிட்டார். தொடர்ந்து இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த ஆனந்தபூர் தாம் பக்தர்களிடையே பிரதமர் உரையாற்றினார்.

மோடி- ஃபுலே

இன்று, சமூக சீர்திருத்தவாதி மகாத்மா ஃபுலே பிறந்த நாளை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி அன்னாருக்கு புகழாரம் சூட்டி உள்ளார். மகாத்மா ஃபுலே, மனித குலத்தின் நிஜமான சேவகர் என்றும், மனைவியுடன் இணைந்து, ஒடுக்கப்பட்ட பிரிவினரின் நலனுக்காக, வாழ்வையே அர்ப்பணித்துக் கொண்டவர் என்றும் சமூக ஊடகத்தில் பிரதமர் கூறி உள்ளார். நாட்டிற்கான மகாத்மா ஃபுலேயின் விலை மதிப்பற்ற பங்களிப்புகள், வரவிருக்கும் தலைமுறைகளையும் தொடர்ந்து ஊக்குவிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சுகாதாரம்

நாட்டு மக்கள் அனைவருக்கும் தரமான மருத்துவ சிகிச்சைகள், எளிதாகவும், மலிவான கட்டணத்திலும் கிடைப்பதை அரசு உறுதிப்படுத்தி வருவதாக மத்திய தொழிலாளர் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறி உள்ளார். இன்று டெல்லி அருகே பரிதாபாத்தில் இஎஸ்ஐ மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் 2-ஆவது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், முன்னேறிய நாடாக இந்தியா மேம்பட அனைத்து மக்களின் ஆரோக்கியம் மிக முக்கியம் என்றார். டாக்டர்கள் அனைவரும், நாட்டிற்கே முதலிடம் என்ற அடிப்படையில், முற்றிலும் மனித நேய உணர்வுடன், செயல்பட வேண்டும் என அமைச்சர் மேலும் வலியுறுத்தினார்.

வேவ்ஸ்

இந்தியாவில் படைப்பு திறன் சார் பொருளாதாரத்தில், மும்பைக்கும் மகாராஷ்டிர மாநிலத்திற்கும் முக்கிய பங்கு இருப்பதாகவும், வேகமாக மாறி வரும் தொழில் நுட்பச் சூழலிலும் இந்நிலையை பராமரிக்கவே, ஊடக மற்றும் கேளிக்கை துறைக்கான வேவ்ஸ் உச்சி மாநாட்டை மும்பையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறி உள்ளார். மகாராஷ்டிர முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவீசுடன் இணைந்து, இன்று மும்பையில், வேவ்ஸ் உச்சி மாநாட்டிற்கான ஏற்பாடுகளை அவர் ஆய்வு

செய்தார். உலகிலேயே, ஊடக மற்றும் கேளிக்கை துறைக்கான மிகப் பெரிய மாநாடாக, வேவ்ஸ் உச்சி மாநாடு அமையும் என்றும், நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள், இம்மாநாட்டில் பங்கேற்க உள்ளதாகவும் திரு பட்நவீஸ் தெரிவித்தார். இந்திய படைப்புத் திறன்சார் தொழில் நுட்பக் கழகத்தை மும்பையில் அமைக்க அனுமதி அளித்ததற்காக, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார். திரு அஸ்வினி வைஷ்ணவ், திரு தேவேந்திர பட்நவீஸ் ஆகியோர் இணைந்து இன்று மும்பையில் பல்வேறு ரயில்வே திட்டங்களின் அமலாக்கத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையும் நேரடியாக ஆய்வு செய்தனர்.

முர்மு

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, போர்ச்சுக்கல் மற்றும் ஸ்லோவேக்கியா நாடுகளுக்கான அரசு முறைப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு, இன்று Bratislava நகரில் இருந்து, மீண்டும் புதுடெல்லிக்கு புறப்பட்டுள்ளார். முன்னதாக அங்குள்ள இந்திய வர்த்தகர்களுடன், அவர் கலந்துரையாடினார்.

ஸ்லோவேக்கியா நாட்டிற்கு, இந்திய குடியரசு தலைவர் ஒருவர், பயணம் மேற்கொண்டது, 30 ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் இதுவே முதல் முறையாகும். குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இப்பயணத்தின் போது, ஸ்லோவேக்கியா அதிபர் மற்றும் பிரதமருடன்,

பிரதிநிதிகள் நிலையில் பேச்சு வார்த்தை நடத்தினார். இதைத் தொடர்ந்து இருநாடுகளுக்கும் இடையே, 2 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. குடியரசு தலைவருக்கு ஸ்லோவேக்கியா நாட்டின் உயரிய முனைவர் விருதும் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

குடியரசு தலைவரின் ஸ்லோவேக்கியா பயணத்தினால், இருநாடுகளுக்கும் இடையே, எஃகு, ரயில்வே, உயிரி எரிபொருள், சுற்றுலா உள்ளிட்ட துறைகளில் வர்த்தக வாய்ப்புகள் அதிகரித்து இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

*கூட்டணி-அமித் □ ா*

2026-ஆம் ஆண்டு தமிழக சட்டமன்ற தேர்தலுக்கு, அஇஅதிமுக பொதுச் செயலர் திரு எடப்பாடி பழனிச்சாமி தலைமையில், பிஜேபி கூட்டணி அமைத்து இருப்பதாக, மூத்த பிஜேபி தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா அறிவித்துள்ளார். திரு எடப்பாடி பழனிசாமி, திரு அண்ணாமலை ஆகியோருடன் இணைந்து சென்னையில் இன்று மாலை நடத்திய செய்தியாளர் கூட்டத்தில் அவர் இதை அறிவித்தார். தேசிய அளவில் இக்கூட்டணி, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் செயல்படும் என்றும் அவர் கூறினார். அஇஅதிமுக-பிஜேபி கூட்டணி இயல்பான கூட்டணி என்றும் அஇஅதிமுக தரப்பில்

நிபந்தனை எதுவும் விதிக்கப்படவில்லை என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

*மீன்பிடி தடை*

புதுச்சேரி, காரைக்கால், ஏனாம் பகுதிகளில் இவ்வாண்டிற்கான 61 நாள் மீன்பிடி தடைக் காலம், வரும் 15-ஆம் தேதி முதல் அமலாக உள்ளது. மாகே பகுதியில் மீன்பிடி தடைக் காலம் ஜுன் 1 முதல் அமலாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து கூடுதல் விவரங்கள்……..

(வாய்ஸ்)

*மீன்பிடி தடை*

(வாய்ஸ்)

கடல்சார் பல்லுயிர்ச் சூழல் மற்றும் மீன்வளம் மேம்படும் வகையில் மீன்களின் இனப் பெருக்கத்தை அதிகரிக்க ஏதுவாக ஆண்டு தோறும் மீன்பிடி தடைக்காலம் கடை பிடிக்கப்படுகிறது. புதுச்சேரி, காரைக்கால், ஏனாம் பகுதிகளில் ஜுன் 14-ஆம் தேதி அன்றும், மாகே பகுதியில், ஜூலை 31-ஆம் தேதி அன்றும், மீன்பிடி தடைக் காலம் முடிவடையும். அதுவரையிலான காலத்தில், மோட்டார் பொருத்திய பைபர் படகுகள் உட்பட அனைத்து மீன்பிடி விசைப் படகுகளும் கடலுக்குள் செல்ல முடியாது என்றாலும், கட்டுமரங்கள் மற்றும் நாட்டுப் படகுகளுக்கு இந்த

தடை பொருந்தாது. மீன்பிடி தடைக் காலத்தில், உச்சநீதிமன்ற உத்தரவின்படி சுருக்குமடி மற்றும் இரட்டை மடி வலைகளின் பயன்பாட்டிற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

*நீர் சேமிப்பு*

மத்திய அரசால் நீர் பற்றாக்குறை மாவட்டங்களின் வகைப் பாட்டில் சேர்க்கப்பட்டுள்ள புதுச்சேரியில், குறைந்த செலவில் நீர் சேமிப்பு வசதிகளை உருவாக்க, மத்திய நீர் ஆதாரங்கள் துறையினால் பரிந்துரைக்கப்பட்ட எளிய முறை, உழவர்கரை நகராட்சியின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. வியாபார நிறுவனங்கள், கல்வி நிலையங்கள், திருமண மண்டபங்கள் மற்றும் தொழிற்சாலைகள், இந்த எளிய முறையை பயன்படுத்தி, மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பை உருவாக்கி கொள்ள வேண்டும் என நகராட்சி நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.. வரும் நிதியாண்டில் நகராட்சி உரிமங்களை புதுப்பிக்கவும், இதர அனுமதிகளைப் பெறவும் இத்தகைய மழை நீர் சேகரிப்பு வசதிகள் அவசியம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*புதுச்சேரி-தேர்வு*

புதுச்சேரியில் வரும் 13-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை, மத்திய பணியாளர் தேர்வாணையத்தின், நடப்பாண்டிற்கான முதலாவது Combined Defence Services தேர்வு, லாஸ்பேட் வள்ளலார் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், 3 அமர்வுகளாகவும், முதலாவது

National Defence Academy மற்றும் Naval Academy தேர்வு, லாஸ்பேட் அரசு மகளிர் பொறியியல் கல்லூரியில், 2 அமர்வுகளாகவும், நடைபெற உள்ளது. மொத்தம் 298 பேர் தேர்வு மையமாக புதுச்சேரியை தெரிவு செய்து இருப்பதாகவும், தேர்வு தினத்தன்று புதிய பேருந்து நிலையத்தில் இருந்து, தேர்வு மையங்கள் வரை, சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்றும், புதுச்சேரி அரசின் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை தெரிவித்துள்ளது.

*ஏனாம்*

உடல் ஆரோக்கியம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன், இந்திய விளையாட்டு ஆணையத்தின் ஏனாம் மையத்தினர் இன்று ஏனாமில் ஃபிட் இண்டியா சைக்கிள் பேரணி நடத்தினர். ஜிஎம்சி பாலயோகி விளையாட்டு அரங்கில் இருந்து புறப்பட்டு ராஜீவ் பீச் முனை வரை சென்று திரும்பிய இந்த சைக்கிள் பேரணியில், புதுச்சேரி அரசின் டெல்லி பிரதிநிதி திரு மல்லாடி கிருஷ்ணராவ், சட்டமன்ற உறுப்பினர் திரு கொல்லப்பள்ளி ஶ்ரீனிவாஸ் அசோக், மண்டல நிர்வாக அதிகாரி திரு ஆர் முனுசாமி, உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டதாக எமது ஏனாம் நிருபர் தெரிவிக்கிறார்.

*பொன்முடி*

திமுக துணை பொதுச் செயலாளர் திரு. பொன்முடி அப்பதவியிலிருந்து நீக்கப் பட்டுள்ளதாக அக்கட்சியின் தலைவரும். தமிழக

முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார். நிகழ்ச்சி ஒன்றில் பெண்கள் குறித்து சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டதன் காரணமாக திரு. பொன்முடி மீது இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்சியின் புதிய துணை பொதுச் செயலாளராக திரு. திருச்சி சிவா நியமிக்கப் பட்டுள்ளார்.

*வானிலை*

நேற்று மத்திய மேற்கு வங்க கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி இன்று காலை வலுவிழந்தது. ஆயினும் அதே மத்திய மேற்கு வங்க கடல் பகுதிகளின் மேல், தற்போது வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால், வரும் 7 நாட்கள் வரையிலான காலத்தில், தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது. வரும் 14-ஆம் தேதி வரை, அதிகபட்ச வெப்பநிலையில் பெரிய மாற்றங்களுக்கு வாய்ப்பில்லை என்றாலும், ஓரிரு இடங்களில் வெப்பநிலை சற்றே உயரக் கூடும் என்றும், 15-ஆம் தேதி அதிகபட்ச வெப்பநிலை சற்றுக் குறையலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக சென்னை கத்திவாக்கம் ஒன்றாம் மண்டலத்தில் 6 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவியது.

*ஐபிஎல்*

ஐபிஎல் கிரிக்கெட்டில் சென்னையில் இன்று மாலை 7.30 மணிக்கு நடைபெறும் போட்டியில், சென்னை-கொல்கத்தா அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு பெங்களுருவில் நடைபெற்ற போட்டியில், டெல்லி அணி, 6 விக்கெட் வித்தியாசத்தில், பெங்களுரு அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

*ஜம்மு-காஷ்மீர்*

ஜம்மு-காஷ்மீரின் பூஜ்ச் மாவட்டத்தில், போதைப் பொருள் கடத்தல் தீவிரவாதிகளுக்கு நிதி சேகரித்த வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட முகமது பஷீர் என்பவரின் சொத்துக்களை நீதிமன்ற உத்தரவின் பேரில் போலீசார் பறிமுதல் செய்துள்ளனர். சம்பந்தப்பட்ட நகர் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீர் பகுதிக்கு தப்பிச் சென்று தலைமறைவாக உள்ள நிலையில் நீதிமன்றம் ஜப்தி நடவடிக்கைக்கு உத்தரவிட்டது.

*பத்ம விருது*

2026-ஆம் ஆண்டு குடியரசு தினத் தன்று அறிவிக்கப்பட உள்ள பத்ம விருதுகளுக்கான ஆன்-லைன் பெயர் தாக்கல் நடைமுறைகள் கடந்த 15-ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகினறன. வரும் ஜுலை 31-ஆம் தேதி வரை, இதற்கான வசதி, திறந்திருக்கும் என்றும் மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. பத்ம விருதுகளுக்கான பெயர்கள் மற்றும்

பரிந்துரைகளை, ராஷ்டிரிய புரஸ்கார்  இணையதளம் மூலமாக மட்டுமே பதிவு செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று வாரணாசியில் மொத்தம் 3 ஆயிரத்து 884 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு திட்டங்களைத் தொடக்கி வைத்து வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து மத்திய பிரதேஷ் மாநிலம் அசோக் நகர் மாவட்டத்தில் ஈசாகாட் பகுதியில் உள்ள ஆனந்தபூர் தாம்  மடத்திற்கு பிரதமர் நேரில் சென்று வழிபட்டார்.

2026-ஆம் ஆண்டு தமிழக சட்டமன்ற தேர்தலுக்கு, அஇஅதிமுக பொதுச் செயலர் திரு எடப்பாடி பழனிச்சாமி தலைமையில், பிஜேபி, கூட்டணி அமைத்து இருப்பதாக, மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா அறிவித்துள்ளார்.

புதுச்சேரி, காரைக்கால், ஏனாம் பகுதிகளில் 61 நாள் மீன்பிடி தடைக் காலம், வரும் 15-ஆம் தேதி முதல் அமலாக உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/11.4.2025/Script/

---------------------------